‘இரட்டை என்ஜின்’ ஆட்சிகளில் ‘ஒற்றை இலக்க’ பொருளாதார வளர்ச்சி

‘ஒற்றை என்ஜின்’ ஆட்சியான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் ‘இரட்டை இலக்க’ பொருளாதார வளர்ச்சி!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஏப். 30 -

நிதி மேலாண்மையில் ‘இரட்டை என்ஜின்’ ஆட்சிகளில் ஒற்றை இலக்க வளர்ச்சி - ‘ஒற்றை என்ஜின்’ ஆட்சியான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் இரட்டை இலக்க வளர்ச்சி! வெறும் ஓட்டுக் கண்ணோட்டத்தோடு - குறுகிய நிலையில் பார்க்காமல், நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், எவரும் வாழ்த்தியே ஆகவேண்டும்! ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கும் முதலமைச்சருக்கும் பாராட்டு கலந்த வாழ்த்துகள் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டு ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கும் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆளுமைத் திறமைக்கும், சொல்லால், எழுத்தால் அல்ல - செயலால் சாதித்து, வெற்றிக் கொடி நாட்டிடும் ஆட்சி என்பதற்கும் ‘பளிச்’சென்ற எடுத்துக் காட்டுக்கு அதன் பொருளாதாரத் துறை வளர்ச்சி! தமிழ்நாடு அரசின் சென்ற ஆண்டு பெருமிதத்திற்குரிய வளர்ச்சி விகிதம் 10.2% என்பதிலிருந்து 2025-2026 ஆம் நிதி யாண்டில், 10.83% வளர்ச்சி விகிதத்தினை எட்டியுள்ளது இனிப்பான செய்தியாகும்! திராவிட மாடலின் வெற்றிக்கு ஒரு கண்கூடான களம் ஆகும்!

நிதி மேலாண்மையில் எப்படி தனித்துவம் பெற்ற ஆட்

சியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது ‘திராவிட மாடல்’ ஆட்சி ஒளிருகிறது என்பதற்கு, திட்டமிட்டு அனைவரையும் உள்ளடக்கிய இந்த வளர்ச்சியே (Inclusive Growth) உகந்த தோர் அளவுகோல் ஆகும்!

இந்தியாவின் தேசிய சராசரி வளர்ச்சி 7.4 சதவிகிதம் தான்! ‘ஒற்றை’ இலக்கத்துக்குள் அடக்கம். ‘இரட்டை என்ஜின் ஆட்சிகளால்தான் சாதனை செய்ய முடியும்’ என்று பிரதமர் மோடி முதல் அவரது ‘சுற்றுக்கிரகங்கள் வரை’ எசப்பாட்டுப் பாடுவது, வழக்கம்.

‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை சரித்திரம்!

அதனைச் செயலில் முறியடித்து, ஒற்றை என்ஜின் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் சாதித்து, இந்திய நாட்டின் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு உயர்ந் துள்ளது என்பது, முதலமைச்சரின் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைச் சரித்திரம்! அவ்வாட்சியின் ஆட்சிக் கிரீடத்தில் அமைந்துள்ள சிறப்பு ஒளிமுத்து அல்லவா?

நிதி மேலாண்மை, ஆளுமையின் ஒரு முக்கிய அம்சம்!

எப்படி இந்த இரட்டை இலக்கச் சாதனையை, ஒற்றை என்ஜின் அரசான ‘திராவிட மாடலால்’ சாதித்துக் காட்ட முடிந்தது என்பதை ஆராய்ந்தால், கல்வி மருத்துவம் போன்ற வாழ்வாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ள துறைகளுக்குச் செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகளை “செலவினம்” என்று கருதாமல், சமூக வளர்ச்சிக்கான “முதலீடு” என்று கருதிச் செலவிட்டும், சரியாகத் திட்டமிட்டும், பொருளாதார வல்லுநர்களின் வழிகாட்டும் நெறிமுறைகளையும் கலங்கரை விளக்காக்கி யும் ஆட்சி நடத்திய 5 ஆண்டு வளர்ச்சியின் வேகமும், வேலைவாய்ப்புக்கான தொழில் முதலீடு களை ஈர்த்து, தமிழ் நாட்டிற்கு அழைத்துக் கால் கோள் விழா நடத்தி, கடும் முயற்சிகளால் தமிழ்நாட்டின் தொழில் வரைபடம் முற்றாக மாறியுள்ளதன் வெளிச்சமுமே இது!

இதற்கு முன்பு ஆண்ட எடப்பாடியார் ஆட்சியில், இது எத்தனை சதவிகிதம்? வாங்கிய கடன், நிதி மேலாண்மையின் லட்சணம் இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு புறம். காலியான கஜானாவையும், கடன் உள்ள அரசையும் தானே தந்துவிட்டுப் போனது முந்தைய அ.தி.மு.க. ஆட்சி! அதைவிட முக்கியம் ‘இரட்டை என்ஜின்’ ஆட்சியின் சராசரி 7.4 சதவிகிதம்.

ஒற்றை என்ஜின் - அதுவும் பல நிதி மறுப்புத் தடங்கல்களையெல்லாம் தாண்டித்தான் இந்த இரட்டை இலக்க சாதனை! தெளிந்த பொருளாதார அறிவும், புரிதலும் உள்ள எவரும் இதற்காகத் தமிழ்நாடு ‘திராவிட மாடல்’ ஆட்சியைப் பாராட்டியே தீருவர்.

தமிழ்நாடு - பெரியார் மண் - திராவிட உணர்வு நிலம்!

தமிழ்நாடு ஜாதிக் கலவரம், “மதக் கலவரம் இல்லா அமைதிப் பூங்காவாக”த் திகழும் பெரியார் மண் - திராவிட உணர்வு நிலம் என்பது ஒரு முக்கிய அடிப்படைக் காரணமல்லவா?

இந்த ஒப்பற்ற சாதனைக்காக முதலமைச்சரைப் பாராட்ட மனமில்லாதவர்களும்கூட, தமிழ்நாட்டின் வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், பாராட்டியே தீரவேண்டியவர்கள் ஆவார்கள். எவரும் வாழ்த்தியே ஆகவேண்டும்!

இதனை வெறும் ஓட்டுக் கண்ணோட்டத்தோடு - குறுகிய நிலையில் பார்க்காமல், நாட்டு வளர்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், வாழ்த்தியே ஆக வேண்டும் எவரும்! முதலமைச்சர் கூறியுள்ளது போல, “எண்ணற்ற சாதனைகளை எண்களாகவும் செய்து காட்டும் எடுத்துக்காட்டு ஆட்சியே ‘திராவிட மாடல்’ ஆட்சி” ஆகும். பாராட்டு கலந்த வாழ்த்துகள்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முரசொலி சுற்றுப்பயண ஆய்வாளர்

க.தட்சணாமூர்த்தி - த.சியாமளாதேவி புதிய இல்லம் திறப்பு விழா!

அமைச்சர்கள் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஏப். 30 -

முரசொலி நாளிதழின் சுற்றுப்பயண ஆய்வாளர் வேளச்சேரி க.தட்சணா மூர்த்தி - த.சியாமளா தேவி இல்லத்திறப்பு விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாவட்டச் செயலாளர்கள், கழகத் தோழர்கள் பங்கேற்கின்றனர்.

சென்னை - வேளச்சேரி க.ராதா - கணேசன் மற்றும் க.செண்பக வள்ளி கன்னியப்பன் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் இன்று (30.04.2026 - வியாழக்கிழமை) இடம்: 145/1, பால்காரன் நடேசன் தெரு, வேளச்சேரி, சென்னை 600 042ல் புதியதாக கட்டியுள்ள இல்லத்தை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் (சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை) அவர்கள் எங்கள் இல்லத்தினை திறந்து வைக்கின்றார்.

இதில் அமைச்சர் மா. சுப்ரமணியன், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருத்தனி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு எம்.சி., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., மயிலை த.வேலு எம்.எல். ஏ., க.சுந்தர் எம்.எல்.ஏ., வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் மற்றும் மாநில, மாவட்டக்கழக, பகுதி கழக, வட்ட கழக, நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் க.செந்தில்குமார், க.ஜெயகாந்தன், செ.பிரசன்னக்குமார், செ.மனீஷ்கண்ணன், ச.சுஜீத்குமார், ம.தியாகராஜன், கோ. திருக்குமரன், ம.சரண், ஜெ.விகாஷினி, ஜெ.விஷாலினி மற்றும் இளைஞரணி, மகளிரணி, மாணவரணி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

த.கமலேஷ், த.அஸ்வின் நன்றி கூறுகின்றனர்.

தி.மு.தனியரசு தலைமையில் – சென்னை வடகிழக்கு

மாவட்டப் பிரதிநிதி ய.நந்திவர்மன் புதுமனை புகுவிழா!

மாதவரம் எஸ்.சுதர்சனம், கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், கே.பி. சங்கர், வை.ம.அருள்தாசன் பங்கேற்பு!

சென்னை ஏப்:30

சென்னை வடகிழக்கு மாவட்டப் பிரதிநிதி ய.நந்திவர்மனின் புதுமனைப் புகுவிழா நிகழ்ச்சி பகுதி செயலாளர் தி.மு.தனியரசு தலைமையில் நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, இரா. கிரிராஜன் எம்.பி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட பிரதிநிதி ய.நந்திவர்மனின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சி திருவொற்றியூர் டி.எஸ்.ராமானுஜம் நகர், பக்தவச்சலம் தெருவில் இன்று (30.4.2026 வியாழக்கிழமை) காலை நடைபெறுகிறது.

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர், சேர்மன் தி.மு.தனியரசு தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் 8-வது வட்ட கழக செயலாளர் டி.சி.வி. மணிகண்டன், மாமன்ற உறுப்பினர் ராஜகுமாரி விஜயன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இவ்விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர் - மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், மாதவரம் எஸ். சுதர்சனம், வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர், திருவொற்றியூர் மேற்குப் பகுதி செயலாளர் வை.ம.அருள்தாசன், மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. முருகேசன், டி.ஏ. ராஜ், சாந்தி பக்தன், தலைமைக் கழக வழக்கறிஞர் வீ.கவிகணேசன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

மேலும் கிழக்கு பகுதி நிர்வாகிகள் ஆர்.சி. ஆசைத்தம்பி, எம்.வி.குமார், பிரபாவதி மணி, இரா.குமரேசன், வட்ட கழக செயலாளர்கள் த.கார்த்திகேயன், எம்.எல். சரவணன், எஸ். தமிழ்ச்செல்வன், குறுத்து சி. முனுசாமி க.வீ.சதீஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஏகா. கார்த்திகேயன், ஆர்.சந்தர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆர். ரஜினிபாபு, எஸ். பாஸ்கரன், பி.எஸ்.சைலஸ், டி.டி.எம். பாபு, ப.சந்தானகிருஷ்ணன், தினேஷ் குமார், முருகா ஆறுமுகம், க.கார்த்திகேயன், வி.பழனிவேலு, ம.ஜெயராமன், அப்துல் சலீம், எத்திராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கு. தமிழ்மணி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோமள வல்லி, தொண்டரணி அமைப்பாளர் ரா.மோகன சுந்தரம், வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் வி. தியாகராஜன், மாணவரணி அமைப்பாளர் எம்.எம். செந்தில், அரசு வழக்கறிஞர் எஸ். பொன்னிவளவன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மா.வெ.நா.உதயகுமார், டி.ஜி.ஆர்.மணிவண்ணன், டி.பி.பாலசுந்தரம், ஜிம் பரசுராமன், அருளானந்தம், எம்.எஸ்.தினேஷ்வேலன், தொழிலாளர் அணி அரங்கநாதன், வே.இளங்கோவன், திருவொற்றியூர் வர்த்தகர் சங்க பொதுச்செயலாளர் ரஜினி தயாளன், தேரடி பரமசிவம், ரஜினி சேகர், ரஜினி கண்ணன், தொழிலதிபர் பிரகாஷ், சுற்றுச்சூழல் அணி பா.பால உமாபதி, இலக்கிய அணி நி. நித்யாதாசன், த.மகிழன்,

பகுதி அணிகளின் பி.ஜி. அவினாஷ், கே.மோகன்ராஜ், கார்த்திக் சூரியராஜ், எம்.மணி கண்டன், பாலமுருகன், ரஞ்சித் குமார், அணி அமைப்பாளர் முரசொலி ஆனந்த், பகுதி சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் பி.ஆர். ஃபாருக், சுற்றுச்சூழல் அணி ஜெயச்சந்திரன், மீனவர் அணி குமரன், வழக்கறிஞர் கலையரசன், டிஎன் முரளி மனோகர், மாயாவி கு.மோகன், எம்.எஸ். பொன்ராஜ், எஸ்.பாக்கியமணி

சமூக சேவகி திருமதி லட்சுமி ராஜாராம், வட்ட நிர்வாகிகள் சுப்பிரமணி, சீனிவாசன், எஸ்.மூர்த்தி, செந்தில் வேல், தி.மு.சரவணன், முகமது சித்திக், சி.எஸ்.ஆர்.ஜெகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

113 வது வட்ட அவைத் தலைவர் ராமன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஏப். 30-

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 113 வது வட்ட கழக அவை தலைவர் கிராம தெரு ராமன் அவர்கள் 28.04.2026 புதன்கிழமை மாலை 7:30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் அவரது இல்லமான நெ-38/19 கிராமதெரு 2வது சந்து நுங்கம்பாக்கம் சென்னை600034 என்கின்ற முகவரியில் இருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

இராயபுரம் மேற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்

சீனிவாசனின் தந்தை கே.காமராஜ் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஏப்.30-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி, 48வது வட்டம், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சீனிவாசனின் தந்தை கே.காமராஜ் (வயது 62) அவர்கள் நேற்று (29.4.2026 - புதன்) பகல் 1:30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்ததும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் (30.4.2026 - வியாழன்) மாலை 3.00 மணியளவில் எண்.8/19, தைனியப்பன் தெரு, பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை - 21 எனும் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து புறப்பட்டு, மூலக்கொத்தலம் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

மக்கள் மன்றத்தில் வீழ்த்த முடியாதவர்கள் நீதிமன்றத்துக்குச் செல்கிறார்கள்!

மின்மாற்றிக் கொள்முதலில் - அரசுக்கு ஒரு ரூபாய் கூட இழப்பு ஏற்படவில்லை!

வி.செந்தில்பாலாஜி – செய்தியாளர்களிடம் விளக்கம்!

கோவை, ஏப். 30-

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்மாற்றிகள் கொள்முதல் செய்வதில் இழப்பில்லை. பொதுவெளியில் மக்கள் மன்றத்தில் வீழ்த்த முடியாதவர்கள் நீதிமன்றத்திற்கு போகிறார்கள் என்று கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்மாற்றிகள் கொள்முதல் செய்வதில் தவறுகள் நடந்திருக்கிறது என்று ஒரு அமைப்பு புகார் தெரிவித்து நீதிமன்றத்திலும் அது குறித்து வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். அந்த வழக்கினுடைய தீர்ப்பில் இன்று உயர்நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவுகளை பிறப்பித்திருக்கின்றார்கள். அது குறித்து சில விளக்கங்களை அளிப்பது என்னுடைய கடமையாக கருதி உங்களை அனைவரையும் இந்த நேரத்தில் நான் சந்தித்திருக்கின்றேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை பொறுத்தவரைக்கும் மின்மாற்றிகள் கொள்முதல் என்பது 1987 ஆம் ஆண்டு தொடங்கி அன்றைய நடைமுறைகள் என்ன பின்பற்றப்பட்டதோ அதே நடைமுறைதான் இன்று வரை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன.

ஒரு டெண்டர் கோட் பண்ணும் போது 20 பேர். 30 பேர் அந்த டெண்டர்ல கலந்துக்குவாங்க. சில பேரு எல்1 பிரைஸை கோட் பண்ணுவாங்க. ஒரே மாதிரியான பிரைஸ் இருக்கும். சில பேர் எல்2 பிரைஸ் ஒரே மாதிரியா இருக்கும். சில பேர் எல்3 ஒரே மாதிரியான ரேட்டை கோட் பண்ணியிருப்பாங்க. அந்த வகையில பார்த்தா 1987-லேயே கூட ஒரு டெண்டர்ல ரெண்டு பேர் எல்1 இல் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. அதே 87-இல் திரும்ப 3 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. அதுக்கு அடுத்து பார்த்தீங்கன்னா நீங்க வரிசையா 2006-ல் எல்1 ஒருத்தர்னா. எல்2 23 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. எல்3 அன்னைக்கு 18 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. 2011-12- ம் ஆண்டு எடுத்தீங்கன்னா 29 நபர்கள் டெண்டர்ல கலந்துகிட்டதுல எல்3 பார்த்தீங்கன்னா 17 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. இப்படி 2011, 2012- இல் ஆரம்பிச்சு 2013, 2014 அதே மாதிரி வரிசையா இப்ப வரைக்கும் கிட்டத்தட்ட 30 டெண்டருக்கு மேல போடப்பட்டதுல வந்து பார்த்தீங்கன்னா 2016, 2017-இல் 17 பேர் ஒரு டெண்டர்ல கலந்துக்குறாங்க. அதுல நாலு பேர் ஒரே பிரைஸை கோட் பண்றாங்க. 11 பேர் எல்2- ல் ஒரே பிரைஸ் கோட் பண்றாங்க. அதே 2016, 2017-ல் எல்1 இல் ஒருத்தர் . எல்2 வில் 18 பேர். எல்3 இல் 6 பேர். அதே 2016, 2017-இல் 21 பேர் கலந்து கிட்ட டெண்டர்ல எல்1 இல் ஒருத்தர். எல்2 இல் ஒருத்தர். எல்3 இல் 17 பேர். அதே 2016, 2017-இல் எல்1 இல் ஒருத்தர். எல்2 இல் ஒருத்தர். எல்3 இல் 31 பேர். இன்னொரு 2016, 2017 டெண்டர்ல எல்1 இல் 5 பேர். எல்2 இல் 29 பேர். 2017, 2018-இல் 28 பேர் கலந்து கொண்டதில் எல்1 இல் 5 பேர். எல்2 இல் 6 பேர். எல்3 இல் ஒருத்தர். 2019, 2020-இல் எல்1 12 பேர். எல்2 ஒருத்தர், எல்3 20 பேர். அதே 2019, 2020-இல் 11 பேர் எல்1, ஒருத்தர் எல்2, 6 பேர் எல்3. இன்னொரு 19, 20 டெண்டர்ல 12 பேர் எல்1. ஒரே பிரைஸை கோட் பண்ணது 12 பேர். எல்2 ஒருத்தர். எல்3 வந்து நாலு. 20, 21-ல வந்து 33 பேர் கலந்துக்குறாங்க. 11 பேர் எல்1 பிரைஸை மேட்ச் பண்ணி கோட் பண்ணியிருக்காங்க. 15 பேர் எல்2 ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. எல்3 ஒருத்தர். இப்படி முறையா வந்து டெண்டர் போடும்போது வந்து ஒருத்தர் ஒரு கலந்துகிறவங்க 30 பேர். 35 பேர். 40 பேர் இருக்கும்போது குறிப்பிட்ட சிலர் வந்து எல்1 பிரைஸ்க்கு மேட்ச் ஆகுற மாதிரி இருக்கும். சில பேர் வந்து எல்2 பிரைஸ் கோட் பண்ணியிருப்பாங்க. சில பேர் எல்3 பிரைஸை கோட் பண்ணியிருப்பாங்க. பொதுவா டான்ஜெட்கோ பொறுத்தவரைக்கும் என்னன்னா எல்1 பிரைஸை யார் மேட்ச் பண்ணி கொடுக்குறாங்களோ அவங்களுக்கு அந்த டெண்டரை பிரிச்சு கொடுப்பாங்க.

ஒருத்தரே சப்ளை பண்ண முடியாது அப்படிங்கறதுனால இது 1987-ல இருந்து இருக்கக்கூடிய நடைமுறை. அதை வந்து எல்1-ஐ மேட்ச் பண்ணி கொடுக்குறவங்களுக்கு எவ்வளவு நமக்கு டிமாண்ட் இருக்கோ அதுக்கு தகுந்த மாதிரி அவங்களுக்கு பிரிச்சு ஓர்க் ஆர்டர் கொடுப்பாங்க. இதுதான் இதுவரை இருக்கக்கூடிய நடைமுறைகள். இந்த நடைமுறைகள்தான் டான்ஜெட்கோ வந்து தொடர்ந்து பின்பற்றி வருது. இது இல்லாம இந்த டெண்டரை வந்து ஸ்க்ரூட்டினி கமிட்டி ஒன்னு இருக்கு. அதுக்கப்புறம் போர்டு கமிட்டி ஒன்னு இருக்கு. மூணு கமிட்டி இருக்கு இதுல. இந்த டெண்டரை ஃபைனல் பண்றதுக்கு சீனியர் ஆபீசர்ஸ் இருக்கக்கூடிய மூணு கமிட்டிகள் தான் இந்த டெண்டரை வந்து ஃபைனல் பண்ணி இந்த ஆர்டர் கொடுக்கலாமா வேண்டாமான்னு முடிவெடுக்குறது. அதிகாரிகள் சார்ந்த அந்த குழு மூணு குழுக்கள்தான் ஒண்ணு ஒண்ணா ஃபைனல் பண்ணி ஃபைனல் பண்ணி இதுக்கான உத்தரவுகளை

பிறப்பிக்குறாங்க. அவங்களுக்கான ஆர்டர் கொடுக்குறாங்க. அதனால இந்த டெண்டரை பொறுத்தவரைக்கும் டான்ஜெட்கோவினுடைய இந்த மின்மாற்றி கொள்முதலை பொறுத்தவரைக்கும் கடந்த காலங்களில் என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டதோ அதே நடைமுறைகள்தான் இப்பொழுதும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன.

இடையில வந்து சில நேரங்கள்ல ஆட்சி மாறி இருக்கலாம். ஆட்சி மாறினாலும் கூட அவ்வளவும் அதே காலத்தில் இந்த நடைமுறைகள்தான் பின்பற்றப்பட்டு இருக்கின்றன. ஆனா குறிப்பா அந்த ஒரு அமைப்பு வந்து தாக்கல் செய்த வழக்குல ஏதோ இப்பொழுது இந்த நான்கு ஐந்து ஆண்டுகளுக்குள்ள டான்ஜெட்கோவுல தவறு நடந்தது போல தனியாக அதை பிரித்து எடுத்து நீதிமன்றத்திலே வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள். அது குறித்து புகாரையும் கொடுத்திருக்கின்றார்கள். நீதிமன்றம் இன்று சிபிஐ விசாரணைக்கு என்று உத்தரவுகளை பிறப்பித்திருக்கின்றார்கள். ஆகையால் என்னை பொறுத்தவரைக்கும் நான் அந்த டான்ஜெட்கோவினுடைய தமிழ்நாட்டின் முதலமைச்சருடைய வழிகாட்டுதலோடு பொறுப்பு பார்த்ததுனால சொல்றேன். எந்த இடங்களிலும் டான்ஜெட்கோ அல்லது அரசு நிர்வாகம் இதில் எந்தவித தவறுகளுக்கும் இடமில்லை. முறையாக மூன்று குழுக்கள் அதை பரிசீலித்து ஒவ்வொரு டெண்டரும் இறுதி முடிவெடுத்துதான் அதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எந்த இடங்களிலும் அரசுக்கோ டான்ஜெட்கோவுக்கோ ஒரு ஒரு நயா பைசா கூட இழப்பு ஏற்படவில்லை என்பதை மிகத் தெளிவாக உங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு பிரைஸை கோட் பண்றது வந்து நம்ம யாரையும் கேள்வி கேட்க முடியாது. 40 பேர் கலந்துக்குறாங்க. 10 பேர் ஒரு பிரைஸை கோட் பண்ணியிருப்பாங்க. இன்னும் 10 பேர் எல்2 பிரைஸ் கோட் பண்ணியிருப்பாங்க. இன்னொரு 15 பேர் வந்து எல்3 பிரைஸை கோட் பண்ணியிருப்பாங்க. இது நம்ம அவங்ககிட்ட கொஸ்டின் கேட்க முடியாது. கடைசியா என்ன பண்றோம்? நமக்கான ரேட் கூட்டபில் ரேட் இருந்தா போர்டு வந்து என்னன்னா பிரைஸை குறைப்பாங்க. அவங்ககிட்ட கூப்பிட்டு எல்1-ஐயே பிரைஸை கூப்பிட்டு பேசி பிரைஸை குறைப்பதற்கான முயற்சியில் எடுப்பாங்க. அந்த பிரைஸ் குறைச்சதுக்கு அப்புறம் யாரெல்லாம் எல்2, எல்3-லாம் வந்து எல்1 பிரைஸை மேட்ச் பண்றாங்களோ அவங்களுக்கு அந்த ஆர்டரை பிரிச்சு கொடுப்பாங்க. இது தான் இருக்கக்கூடிய வழக்கமான நடைமுறை. அதுல வந்து எந்த விதமான தவறுகளுக்கும் இடமில்லை. எந்த ஒரு ஒரு துளி நயா பைசா கூட டான்ஜெட்கோவுக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படவில்லை.

சிபிஐ விசாரணை நியாயமாக நடக்குமா?

சிபிஐ விசாரணை நடக்கும் நியாயமா நடக்குமா. நடக்கலையான்னு விசாரணை ஆரம்பிச்சதுக்கு அப்புறம் நம்ம எப்படி போகுது என்னங்கிறதை பொறுத்திருந்து பார்ப்போம். சில நேரங்களில் இதுல கூட வந்து சில அ.தி.மு.கவுடைய வழக்கறிஞர்கள் எல்லாம் கூட இதுல உள்ள கொண்டு வந்து போட்டாங்க. அதே அ.தி.மு.க. கட்சி எடப்பாடி பழனிசாமி மேல கேஸ் போட்டப்ப ஹைகோர்ட்ல வந்து சிபிஐ விசாரணைன்னு சொன்னப்ப உச்சநீதிமன்றத்துல போய் அதுக்கு தடையாணை வாங்கினாங்க.

இதெல்லாம் கடந்த காலங்களில் இருக்கக்கூடிய வரலாறுகள். அதெல்லாம் மறைச்சு இன்னைக்கு என்னவோ வந்து அவங்க இந்த வழக்குல தங்களை இணைச்சிருக்காங்க. அவங்க ஆட்சி காலத்துல இதுதான் நடந்திருக்கு. அது உங்களுக்கு தெரியுமா தெரியலையான்னு தெரியல. ஆக இதுல நான் யாரையும் வந்து இது சரி தவறுன்னு சொல்லல. என்ன நடைமுறைகள் டான்ஜெட்கோ வந்து போர்டு என்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகிறது? அதே நடைமுறைகள். ஏன்னா இன்னைக்கு ஒரு செய்தி வெளியிடுறது வந்து தொலைக்காட்சியில் இருக்கலாம், பத்திரிகையில் இருக்கலாம். சிபிஐ விசாரணைக்கு உத்தரவு அப்படிங்கிற ஒரு செய்தி மட்டும்தான் வரும். சோ இதுக்குள்ள என்ன நடந்துங்கிறதை முழு விவரங்கள் உங்களுக்கு தெரிஞ்சாதான் அதனுடைய அந்த அடிப்படையில நீங்கள் செய்திகள் வெளியிடுவதற்கு வசதியா இருக்கும். அதனாலதான் உங்களுக்கு இன்னைக்கு அழைச்சு இதுக்கான விளக்கங்களை கொடுக்கிறோம்.

முகாந்தரம் இருந்தால் சார். ஒரு சுயமான ஒரு விசாரணை வேணும் அப்படிங்கிறதுலதான் ஒரு பேராதான் கடைசி பேரா படிச்சேன். முழு உத்தரவு இன்னும் வரல. நீதிமன்றத்தினுடைய முழு உத்தரவும் இன்னும் வரல. அந்த ஆர்டர் கிடைச்சதுக்கு அப்புறம்தான் அதுக்குள்ள என்னென்னலாம் சொல்லியிருக்காங்கன்னு தெரியும். கடைசி பேரா மட்டும் வாசித்திருக்காங்க. அதனால அந்த கடைசி பேரா வாசித்து நாளைக்கு ஆர்டர் வரணும் ஆச்சுன்னா இன்னைக்கு நீங்க சிபிஐ விசாரணை மட்டும்தான் அப்படிங்கிறது மட்டும்தான் தலைப்பு செய்தியா போடுவீங்க. அதுக்காகத்தான் இந்த விளக்கங்களை கொடுக்கிறோம். முழு ஆர்டர் வந்ததுக்கு அப்புறம் நான் உங்களை சந்திக்கிறேன் நான். அப்போ அதுல என்னெல்லாம் சொல்லியிருக்காங்க என்னங்கிற கருத்தை நான் திரும்ப நான் சொல்றேன்.

நெருக்கடி!

செய்தியாளர்: உங்களுக்கு நெருக்கடியை கொடுக்குறாங்களா?

வி.செந்தில்பாலாஜி: நெருக்கடின்னு பார்க்கல. அதாவது வந்து ஒரு புகார் கொடுக்கக்கூடிய ஒரு அமைப்பு கூட ரொம்ப வசதியா இந்த நாலு வருஷத்துல நடந்தது மட்டும் தனியா பிரிச்சு எடுத்து இது தவறு நடந்திருக்குன்னு சொல்லக்கூடிய வங்க. இல்ல அவங்க 21-க்கு அப்புறம் எடுத்து சொல்றாங்க. ஒரு ஏழு டெண்டர்ல இந்த மாதிரி நடந்திருக்கு. ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. எப்படி அவங்க கோட் பண்ணாங்கன்னு. அதுக்கு முன்னாடி 16, 17-ல நான் இப்ப எவ்வளவு டெண்டர் சொன்னேன். 18, 19-ல சொன்னேன். 87-ல இருந்து இந்த நடைமுறை இருக்கு. அதெல்லாம் ரொம்ப வசதியா மறந்து. மறைச்சு இந்த 5 வருடத்தில் மட்டும் தவறு நடந்தது போல அந்த அமைப்பு வந்து ஒரு கட்சிக்கு ஒரு சில கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டதாகத்தான் நான் நினைக்கிறேன். அவங்க ஒரு சுயமா செயல்பட